RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s719

OPEN ACCESS

# ஆகாயத்துக்கு அடுத்த வீடு கவிதைத்தொகுப்பில் நடப்பியல்

**சி. கீர்த்தனா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ கிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மேட்டமலை, சாத்தூர்-626203, தமிழ்நாடு, இந்தியா.

# Realism in Aagayathuku Adutha Veedu Poem Collection

**C. Keerthana** [a, *]

[a] Department of Tamil, Sri Krishnasamy Arts and Science College, Mettamalai, Sattur-626203, Tamil Nadu, India

* Corresponding Author: keerthi141197@gmail.com

Received: 01-01-2022
Revised: 14-04-2022
Accepted: 30-04-2022
Published: 28-07-2022

Check for updates

**ABSTRACT**

Among the languages that have survived the flood of time, Tamil is a language that is alive and well. There are thousands of literatures and grammar in the Tamil language that deal with humanities. Various works are published in the world of literature from Sangam literature to contemporary literature. Literature of various kinds reflects the life of human society. The creativity and personality of the creators are evident in the work. A community is an area where people live together. The current trend is to highlight the hardships and injustices caused to the people who live and work in society in their literature. This society and justice explains the social woes where justice is denied, crimes are concealed and domination prevails. The trend of the society that wants to recover from slavery and come out is also explored. The theme of inequality is to emphasize that the best culture is to live with equality without discrimination of caste, religion, high or low. It is the government that leads the people, the government that gives pain to the people by doing wrong, and the state of taking power by beating each other for the position, holding the seat and taking power is Realism. This article also examines the Realism of the literary world where the proud literary men are singing their praises.

**Keywords:** Aagayathuku Adutha Veedu, Justice, Realism, Contemporary Literature

## முன்னுரை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக, உலகில் தோன்றி வாழ்வின் பல்வேறு கூறுகளை இயம்புவது இலக்கியம். சங்க இலக்கியம், நீதி இலக்கியம், பக்தி இலக்கியம். காப்பிய இலக்கியம் என்ற வகையில் பத்தொன்பதாம் மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் தமிழ் இலக்கிய உலகில் தடம் பதித்த இக்கால இலக்கியங்களின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கது. ஒரு பண்பாட்டின் மொழி வளத்தையும், ஆசிரியரின் ஆளுமையையும், குறிப்பிட்ட சமூகத்து மக்களின் பழக்கவழக்கங்களையும், சமூகத்தில் நிகழும் நடப்பியலையும், வாழ்வியலையும் கவிதை, சிறுகதை, நாவல், உரைநடை, நாடகம் எனப் பல வகையில் அமைகின்ற தற்கால இலக்கியங்கள் யாவும் எடுத்தியம்புகின்றன. அந்த வகையில் சமூக அவலங்களையும், நடப்பியலையும், எளிய நடை, எளிய சொல்லாட்சியால் படைத்து படைப்புலகில் பெரும் புகழ் பெற்று விளங்குபவர் கவிஞர் (Metha, 2006). படைப்புகளுள் குறிப்பிடத்தக்க ஒன்று "ஆகாயத்துக்கு அடுத்த வீடு". அக்கவிதைத் தொகுப்பில் சமூகம், காதல், வாழ்வியல், அரசியல், நடப்பியல் என்று எடுத்துரைக்காத கருத்துகளே இல்லை. உவமை, உருவகங்கள், மிகையான

 DOI: 10.34256/irjt22s719

கற்பனைகள் தவிர்க்கப்பட்ட இப்படைப்பில் இடம்பெறும் நடப்பியல் சார்ந்த கருத்துக்களை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

## படைப்பும், படைப்பாளுமையும்

வானம்பாடி எனும் புதுக்கவிதை ஏட்டின் மூலம் அறிமுகமானவரே கவிஞர் (Metha, 2006). தமிழக அரசின் பரிசு, விகடன் இதழ் நடத்திய பொன்விழா இலக்கியப் போட்டியில் முதல் பரிசு, பாவேந்தர் விருது என்று பல்வேறு விருதுகளையும், பரிசுகளையும் பெற்றவர். கவிதை, நாவல், கட்டுரை, காவியம் எனப் பல்வேறு படைப்புகள் வழி வாசகர் மனம் கவர்ந்தவர். படிமக் கவிஞரான இவர் 2004 ஆம் ஆண்டு படைத்த ஆகாயத்தக்கு அடுத்த வீடு என்னும் நூல் 2006ல் சாகித்திய அகாடமி விருதினைப் பெற்றது. புதுமையான சிந்தனையையோ, புதிய மொழியையோ ஏற்காமல், முடிவு தெரிந்த துப்பறியும் படம் பார்ப்பது போன்ற கவிதைகளை இப்புதுக்கவிதைத் தொகுப்பில் ஆசிரியர் படைத்துள்ளார்.

## நடப்பியல்

சாதாரண மனித மனத்திற்குத் தோன்றும் நடைமுறையில் உள்ளதை உள்ளபடிக் காட்டும் சிந்தனைக் கலைக்கூறே நடப்பியல் அல்லது யதார்த்தவாதம். இயல்பான மனித மனத்தின் கோபத்தை வெளிப்படுத்துவதே நடப்பியல்.

“நடப்பியல் கலை இலக்கியங்களுக்கு எதிராக எழுப்பப்படும் ஒரு பிரதான கண்டனம். நடப்பியலை கூற முற்படும்பொழுது அவற்றின் கலைப்பண்புகள் வீழ்ச்சியடைந்து ஆவணப்பாங்கான விபரங்களின் மேலோங்கல் எழும் என்ற முனைப்பாகும்” (Kalanidhi Jayarasa, 1998).

படைப்புகளைச் சுவையாகவும், நிகழ்கால நிலையினைச் சுட்டிக்காட்டுவதுமே நடப்பியலின் சிறப்புத்தன்மையாக அமைகின்றது. நவீன உலகில் வாழும் நவீன மனிதனுக்கு ஏற்படும் சீர்கேடுகளையும், அன்றாடப் பிரச்சனைகளையும் எடுத்துரைப்பதே நடப்பியல். இதனை வளர்ந்து வரும் இலக்கியங்களுள் ஒன்றான தற்கால இலக்கியங்களில், நடப்பியல் குறித்து பதிவுகள் படைப்புகளில் பதிவாகிறது.

## சமூகமும், நீதியும்

மக்களுக்கு நடக்கும் அநீதிகளைக் கண்டு சரி செய்வதே சட்டம். ஆனால் சட்டத்தின் ஓட்டையை யாராலும் அடைக்க முடியவில்லை. சட்டங்கள் யாவும் ஆதிக்க வர்க்கத்திற்கு கை தட்டியும், விசிலடித்துக் கொண்டும் இருக்கிறது., நீதியின்மையால் சமுதாயம் சீர்கேடு அடைகின்றது.

“நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்

நாடொறும் நாடு கெடும்”

என்பதில், நாட்டில் நடக்கும் நன்மை, தீமைகளை ஆராய்ந்து பார்த்து ஏற்ற நீதியை வழங்காத அரசு இருக்கும் நாடு அழிந்துப் போகும் என்பதே வள்ளுவரின் வாக்கு (Parimelalhagar, 1998). சமுதாயத்தில் நீதிகள் மறுக்கப்பட்டு, உண்மைகள் மறைக்கப்பட்டு, வாழ்க்கையின் எதிர்பாதையில் பயணித்து வாழும் மக்களின் நிலையினை இந்தியா என் காதலி என்னும் பகுதியில்,

“உன்

தர்பார் மண்டபங்களில்

நியாயங்கள்

தற்கொலை

செய்து கொள்ளும்

முன்பே

கொலை

செய்யப்படுகின்றன"

என்பதில், நியாயம் தவறி இருக்கும் ஜனநாயகத்தையும், மக்கள் எவ்வாறு வாழ்வில் முன்னேற முடியாமல் வழுக்கி விழுகின்றனர் என்கின்ற நடப்பியலையும் பதிவு செய்கின்றார் (Metha, 2006).

## ஆதிகார வர்க்கம்

காலங்கள் ஆயிரம் கடந்தாலும் இந்த ஆதிக்கம் செலுத்தும் கூட்டத்திற்கு மட்டும் மாற்றம் என்பதே இருக்காது. மற்றவர்களைத் தனக்குக் கீழானவர்கள் என்று, ஏளனமாக எண்ணி, அவர்களது உழைப்பைச் சுரண்டும் ஆதிக்க வர்க்கங்களின் செயல்கள் குறிப்பிடத்தக்கது.

"இலையுதிர்காலம் இல்லாமலேயே

உதிருகின்ற உயர்திணை மரங்கள்"

என்ற கவிதை உழைத்து வாழும் மக்கள், அதளற்கேற்ற ஊதியம் இல்லாமல் பட்டினியாலும், வறுமையாலும் வாழ்வை இழந்து வாழ்கின்றனர் என்பது அறியலாகிறது (Metha, 2006). இதனை, இந்தியா என் காதலி என்னும் பகுதியில்,

"அன்னிய முதலாளிகளின்

கோப்பைகளை எமது

குருதியால் நிரப்பிவிட்டு

அவர்களது

குளிர்பானங்களால்

எம்மைக்

குளிர்வைக்கப் பார்க்கிறாய்"

என்று மேலைநாட்டாருக்கும், ஆதிக்க, பணக்கார வர்க்கத்திற்கும் குருதி சிந்த உழைத்து விட்டு, அதற்கேற்ற பலன் இல்லாமல் வாழும் இன்றைய மக்களின் நிலை இங்கு பதிவு செய்யப்படுகிறது (Metha, 2006).

## சமத்துவமின்மை

பிறப்பில் உயர்வு, தாழ்வு என்பது இல்லை. மண்ணில் பிறந்த அனைவருமே சமம். வேற்றுமையில் ஒற்றுமைக் கொண்டு வாழ வேண்டும் என்று இன்னும் பல முழக்கங்கள் இட்டாலும், மானுட சமூகம் மாறாது.

"சாதி இரண்டொழிய வேறில்லை"

என்று முனைப்புடன் எடுத்துரைக்கும் சமூகமே, சமத்துவம் அற்று, பொது நலம் இல்லாமல் வாழும் நிலையே இன்றையக் காலம் (Venkatasamy Nattar, 1927).

"பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும்"

என்பது, உலகில் பிறந்த அனைவரும் சமம் என்பதை வழிமொழிகிறது (Parimelalhagar, 1998). இன்றோ,

“மதங்களுக்கும்

சாதிகளுக்கும்

மகுடம் சூட்டிவிட்டு

மனிதர்கள் கிடக்கிறார்கள்

மருத்துவ மனைகளின்

சவக் கிடங்குகளில்”

என்று, மனிதர்கள் சக மனிதர்களுக்கு முன்னுரிமைத் தரமாமல், சாதிகளுக்கும், மதங்களும் முன்னுரிமைக் கொடுத்துத் தன்னைத் தானே அழித்து வருகின்ற நடப்பியலை இக்கவிதையில் பதிவு செய்கின்றார் (Metha, 2006).

## அரசியலில் நடப்பியல்

நாட்டையும், நாட்டு மக்களையும் நல்வழிப்படுத்தி, சிறந்த பொருளாதாரம் கொண்ட வாழ்வை அமைத்துக் கொடுப்பதே சிறந்த அரசு. தேர்தல் நேரங்களில் மட்டும் மக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி அவர்கள் தேவைகளை அவ்வப்போது நிவர்த்தி செய்வது மட்டும் ஒரு நேர்மையான அரசுக்கான செயல் ஆகாது. ஆனால், தற்போது பல்வேறு நாடுகளில் இவ்வாறான அரசாட்சியே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

“அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்

மறவாது இதுகேள். மன்னுயிர்க் கெல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும் அல்லது

கண்டது இல்”

அறத்தின் நோக்கமும், தேவையும் அரசுக்கு உரியதாய் இல்லாமல், குடிமக்களுக்கு உரியதாய் இருத்தல் வேண்டும் என்பதே மணிமேகலையின் கருத்து (Venkatasamy Nattar, 1994). ஆனால், அறத்தை மறந்து, அரசியலில் ஒருவருக்கொருவர் மாற்றி மாற்றி அடித்துக் கொள்ளும் நடப்பியலை (Metha, 2006).

“ஆளுநர் மாளிகையில்

விருந்து

அனைத்துக் கட்சித்

தலைவர்களுக்கும்!

பரிமாறிக் கொண்டிருந்த

பணியாளர்கள் தமக்குள்

பேசிக் கொண்டனர்

யார் யாரைச்

சாப்பிடப் போகிறார்களோ?”

என்ற கவிதையில் தலைவர்கள் அனைவரும் அவர்கள் தலைமை என்னவென்று அறியாமல், இருக்கும் அவல நிலையினைச் சுட்டிக்காட்டியுள்ளார் (Metha, 2006).

## இலக்கியவாதிகள்

நவீன இலக்கிய உலகில் வளர்ச்சி பெற்று வரும், படைப்பாளிகளின் பங்களிப்பு இன்றியமையாதது. படைப்புகளாலும், விமர்சனங்களாலும், வெற்றி அடைந்து, அதில் கிடைக்கும் இன்பம் அளவிடமுடியாதது. பெற்ற பெருமையைத் தன்னடக்கமாகக் கொள்ளும், இலக்கியவாதிகளின் மத்தியில், தற்பெருமைப் பேசித் தம்பட்டம் அடிப்பவர்களே சமூகத்தில் அதிகமானோர்.

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை

அணியுமாம் தன்னை வியந்து"

பண்பு இல்லாதவர்களே தன்னைப் பற்றிய பெருமை பேசுபவர்கள் என்கிறார் வள்ளுவர். பிறருடைய குறைகளை மறைத்து, அவர்தம் நிறைகளைப் பேசுபவரே சிறந்த மனிதர்கள் (Parimelalhagar, 1998).

"அலங்கார வளைவுகளைத்

தாண்டிய பின்னும்

அரங்கிற்குள் நுழையத்

தயங்கி நின்றது கவிதை!"

என்ற படைப்பின் சிறப்பைக் கூறி, நடப்பியலை

"அவர்களின் நோக்கமெல்லாம்

என்னைப்பற்றி

விவாதிப்பதல்ல

தம்மைப் பற்றித்

தம்பட்டம் அடிப்பதே!"

என்று இன்றைய படைப்பாளரின் மனநிலையையும், படைப்பின் மேன்மையினையும் விளக்கியுள்ளார் (Metha, 2006).

## முடிவுரை

மானுட சமூகத்தில் அன்றாடம் நடைபெறும் நிகழ்வுகளைப் பல்வேறு இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. அவற்றில் நேர்மறையான வாழ்வியல் கருத்துக்களும், மக்கள் வாழ்வில் அடையும் சிக்கல்களும் இடம்பெறுகின்றன. குற்றங்களுக்கு தண்டனை வழங்காமல், நியாயங்களுக்கு நீதியும் வழங்காமல் இருக்கும் சமூகத்தை இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. இயல்பாக, யதார்த்தமாக நடைபெறும் நிகழ்வுகளை முனைப்புடன் எடுத்தியம்புவதே நடப்பியல். பிறப்பால் அனைவரும் சமம் என்பதை அனைவரும் உறுதிமொழியாகக் கொண்டு வாழ வேண்டும் என்பதை சமத்துவமின்மை என்ற உட்தலைப்பு வலியுறுத்துகிறது. முதலாளித்துவக் கொள்கை மாறி சமத்துவம் பிறக்க வேண்டும் என்பதே தலையாயக் கொள்கையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையோடு அரசியல் அமைப்பு அமைய வேண்டும் என்பதையும் இக்கட்டுரை விளக்குகிறது. மானுட சமூகத்தின் வாழ்வியலையும், நாட்டின் அவலத்தையும், ஆணி அடிப்பது போல் கவிஞர் மு.மேத்தா எடுத்துரைத்த நடப்பியல் செய்திகள் யாவும் இக்கட்டுரையின் வழி ஆராயப்பட்டுள்ளது.

## References

Kalanidhi Jayarasa, S., (1998) Kalaiyum Thiranaaivum, Amma Veeliyeedu, Chennai, India.

Metha, M., (2006) Aagayathuku Adutha Veedu, Universal Publishers, Chennai, India.

Venkatasamy Nattar, N.M., (1927) Avvaiyarin Moodhurai, Manivaasagar Pathippagam, Chennai, India.

Venkatasamy Nattar, N.Mu., (1994) Silapathikaram Moolamum Uraiyum, Gowra Agency, Chennai, India.

Parimelalhagar, (1998) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License